23rd March 1964]

(இ) ஆமெனில், அந்த தொழிற்சாலை எந்த இடத்தில் நிறுவப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) (இ) மத்திய அரசாங்கம் சென்னை மாநிலத்தில் ஒரு Oil refinery நிறுவ தீர்மானித்துள்ளது. நிறுவப்படும் இடம் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: எப்பொழுது இந்த ஆயில் ரிபைனரி நிறுவப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த சர்க்காருக்குத் தெரியாது. மத்திய சர்க்காருக்குத் தான் தெரியும்.

Primary Health Centres

* 370. *Q.*—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of Primary Health Centres sanctioned in the year 1962;

(*b*) the number opened in 1962; and

(*c*) the number opened during 1963?

THE HON. SRIMATHI JOTHI VENCATCHELLUM: (*a*) Forty Primary Health Centres were sanctioned in 1961-62 and no Primary Health Centre was sanctioned in 1962-65 in view of the National Emergency.

(*b*) Ten Primary Health Centres.

(*c*) Four Centres were opened during 1963.

* 371 *Q.*—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Minister for public Health be pleased to state whether there is any proposal to construct quarters for the Medical Officers serving in the Primary Health Centres?

கனம் திருமதி ஜோதி வெங்டாசலம்: பிரதம சுகாதார நிலையங்களைத் திறக்கும் திட்டத்தில், அந்த நிலைய மருத்துவ அதிகாரிகட்கும் குடியிருப்புகள் கட்டித் தரும் வேலையும் அடங்கும்.

* 372 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any request from the public of Thoppur and surrounding villages for the location of a Primary Health Centre at Thoppur in the Nallampalli Block in Dharmapuri; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : இப்பொழுது நாஷனல் எமர்ஜென்ஸி இல்லாமல் இருக்கிற காரணத்தினல், ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் உத்திரவிடும் எண்ணம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆண்டில் 8 கட்டடங்கள் கட்டலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறது. அதிகப்படியாக கட்டுவதற்கு இயலாது. ஏற்கனவே கட்டி முடிந்தவையெல்லாம் இந்த ஆண்டு திறந்து, அவைகளில் டாக்டர்கள் போட்டு, சிகிச்சை அளிக்கப்படும்.

திரு. ம. கமலநாதன் : 373 வட்டாரங்கள் இருக்கும் நமது மாநிலத்தில் 137 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் வேலை செய்கின்றன. மற்ற பிளாக்குகளில் எப்பொழுது துவக்கப்படும் ? நகர்ப்புறங்களில் வைத்தியவசதி அளிக்கப்படும் அளவுக்கு, கிராமப்புறங்களில் வைத்திய வசதி அளிக்கப்படாதது ஏன் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது 137 நிலையங்கள் ஏற்கனவே இருக்கின்றன. அரசாங்கம் சாங்ஷன் செய்தது 192. மற்றவைகளும் இப்பொழுது இந்த ஆண்டிலே நடைமுறையிலே திறக்கப்பட்டு, நடைபெறும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட கட்டடங்கள், கொஞ்சம் தொடங்கி நிறுத்திவைக்கப்பட்ட கட்டடங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு, அவைகளுக்கு முதல் இடம் கொடுத்து, இந்த வருஷத்தில் அவைகளை முடித்துவிட சர்க்கார் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிரைமரி செண்டர்கள் ஆரம்பிக்காத இடங்களில் தான் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, வேலைகள் மெதுவாக நடைபெற்றுக்கொண்டிருந்த இடங்களிலெல்லாம், ஆரம்பித்த இடங்களிலெல்லாம் கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்து, பல கட்டடங்கள் பூர்த்தியாகி இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வழங்குவதிலே மாதம் ஒன்றுக்கு இவ்வளவுதான் என்ற வரையறை உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி ஒன்றும் இல்லை. அங்கே இருக்கிற கிராம மக்கள் எல்லாம் சிகிச்சை பெறுவதற்கு எந்த அளவுக்கு மருந்துகள் தேவையோ அந்த அளவுக்கு பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : மாவட்டத்திற்கு இத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை உண்டா ? அல்லது தேவைக்கேற்ப, வசதியுள்ள இடங்களில் எத்தனை வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம் என்று இருக்கிறதா ?

23rd March 1964]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கத்தினுடைய எண்ணம் இன்றைக்கு இருக்கிற 374 பிளாக்குகளிலும், ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். சென்ற ஆண்டு நேஷனல் எமர்ஜென்ஸியின் காரணத்தால், ஏற்கனவே சாங்ஷன் ஆன பிரைமரி ஹெல்த் சென்டர்கள் கூட நிறுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது விதிகளை கொஞ்சம் ரிலாக்ஸ் செய்து, எங்கு அதிகமாகத் தேவை இருக்கிறதோ, அவ்விடங்களில் வாடகைக் கட்டடங்களில் ஆரம்பிக்கலாமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: அரசாங்கம் சாங்ஷன்செய்த 192 சுகாதார நிலையங்களில் 137 தான் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதி இருக்கக்கூடிய 57 சுகாதார நிலையங்களை இந்த ஆண்டில் திறக்க முடியுமா? தேசிய நெருக்கடியின் காரணமாக கட்டிடங்கள் கட்டுவதற்கு வசதியில்லை என்றால், இந்த 57 சுகாதார நிலையங்களையும் வாடகை கட்டிடங்களில் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே நான் சொன்னேன் எங்கெல்லாம் மருத்துவ நிலையங்கள் இல்லையோ, ஜனங்களுக்கு மருத்துவ சிகிச்சை கொடுப்பதற்கு எங்கெல்லாம் தேவை இருக்கிறதோ, அந்த இடங்களில் வாடகை கட்டிடங்களில் பிரைமரி சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கலாமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: வாடகை கட்டிடங்களில் வைக்கவேண்டுமென்று எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் இருந்து கோரிக்கை வந்திருக்கிறது? 1964-வது ஆண்டில் எத்தனை பிரைமரி சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தர்மபுரியைப் பொறுத்தவரையில் தோப்பூர், லாலிகம், நல்லதம்பள்ளி இந்த மூன்று இடங்களிலிருந்து வேண்டுகோள் வந்திருக்கிறது. எங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அதோடு நல்லதம்பள்ளியில் ஏற்கனவே இருந்த ரூரல் டிஸ்பென்சரியை பிரைமரி சுகாதார நிலையமாக கன்வெர்ட் செய்யலாமா வென்று அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

(இந்த சமயத்தில் ஒலிபெருக்கி திடீரென்று இயங்கவில்லை.)

திரு. செ. சீனிவாசன்: இனமாக இடம் கொடுத்தால் அங்கே இந்த பிரைமரி சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இனமாக இடங்கள் கொடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அரசாங்கத்தின் பாலிஸிக்குத் தக்கபடி தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடங்களாக இருந்து, அங்கே சேவை செய்கின்ற டாக்டர்களுக்கும் வசதி செய்து கொடுத்தால், கண்டிப்பாக அவற்றை ஏற்றுக் கொள்ள அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது.

திரு. மா. இராசாங்கம் : கிராமப் பகுதிகளிலே பிரைமரி சுகாதார நிலையங்கள் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால், அதைப் போக்குகிற வகையில் நடமாடும் மருத்துவ நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிரைமரி சுகாதார நிலையங்கள் குறைவாக இருந்தால் அவற்றை அதிகப்படுத்த இயலாது. ஆனல் 10 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட வட்டங்களில் 5 மைலுக்கு அப்பாற்பட்டு இருக்கக்கூடிய இடங்களில் மருத்துவ சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு ஆட்சேபணை இருக்காது.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடைபெறவேண்டிய இடங்களில் நடக்கவில்லை. மேஜர் டவுன் பஞ்சாயத்துக்களில் கூட சிலவற்றில் கிடையாது. 15,000 ஜனத்தொகை கொண்ட என்னுடைய சொந்த ஊரிலே கூட மருத்துவ வசதி கிடையாது. அங்கே ஒரு பிரைமரி சுகாதார நிலையத்தை ஏற்படுத்த உத்தேசிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினல், அது பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. துரையரசன் : அறந்தாங்கி தாலுக்காவிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லை. அமைச்சர் அவர்கள் கூறியதுபோல வாடகை கட்டிடத்திற்கு தகுந்த இடத்தில் ஏற்பாடு செய்து கொடுத்தால், உடனடியாக துவக்குவதற்கு அரசு உத்தரவு போடுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் சொல்வதைப் போல் தகுதி வாய்ந்த இடமாக இருந்து, ஜில்லா மருத்துவ அதிகாரிக்குத் தெரியப்படுத்தினல், கண்டிப்பாக ஆரம்பிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பல இடங்களில் பிரைமரி சுகாதார நிலையங்கள் ஸாங்ஷன் ஆகி இரண்டு மூன்று வருடங்களாகியும், இனமாக கட்டிடங்கள் கொடுத்தும்கூட, அங்கே ஆரம்பிக்காமல் இருப்பதன் மர்மம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரி தகவல் எதுவும் அரசாங்கத்தினிடம் இல்லை. எழுதியனுப்பினல் நான் பரிசீலனை செய்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள், அதை மறைப்பதற்காக, இந்த மாதிரி இனமாகக் கட்டிடங்கள் கட்டித்தர முன்வருகிறர்கள். அவைகளை ஏற்றுக்கொள்வது மூலம் அப்படிப்பட்ட சமூக விரோதிகளை அரசாங்கம் ஊக்குவிப்பதாகாதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எந்த சமூக விரோதியையும் அரசாங்கம் ஊக்குவிக்க மாட்டார்கள்.

23rd March 1964]

திரு. சா. ராமசாமி : தேவையான இடங்களிலே வாடகைக்காக இடங்களை கொடுத்தால் அங்கே துவக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள் இவ்வாண்டில் தகுதிபெற்றுள்ள இடங்கள் எவை எவை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் சபாநாயகர் : லிஸ்டைப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும். இப்பொழுது எல்லா ஊர்களையும் படிப்பது என்றால் அது சாத்தியமாக இருக்காது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மருத்துவ மனைக்காக சர்க்கார் கட்டடங்கள் கட்டி கொடுக்காவிட்டாலும் கூட, தனிப்பட்டவர்கள் சிலர் அவ்வாறு கட்டிடங்களை கட்டிக்கொடுக்க முன் வருகிறார்கள். அப்படி யார் கட்டிக் கொடுக்கிறார்களோ அதற்கு அவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்று கோரினால் சர்க்கார் அதை அனுமதிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது பிரைமரி சுகாதார நிலையங்களைப்பற்றிய கேள்வி, இருந்தபோதிலும் இந்த உப கேள்விக்கு பதிலளிக்கிறேன். ஒரு மருத்துவ மனை கட்டுவது என்றால், அதற்கு சுமார் 6 லட்சத்திற்குக் குறையாமல் செலவாகும். தாராள மனப்பான்மை உடைய சிலர் ரூபாய் 10,000 அல்லது 20,000 கொடுத்துவிட்டு தங்கள் பெயரை வைக்கவேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் அதை ஒப்புக்கொள்ளாது.

திரு. எஸ். முருகையன் : ஸாங்ஷன் செய்யப்பட்ட சுகாதார நிலையங்களில் 57 ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே அவ்வாறு எத்தனை இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். மணி : இப்படி ஆரம்பிக்கப்படாத நிலையங்கள் லிஸ்டிலே வேப்பூர் பகுதியைச் சேர்ந்த குன்னம் கிராமமும் இருக்கிறதா ?

MR. SPEAKER : The hon. Member can refer to the list.

திரு. தா. சின்னசாமி : கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் சின்ன சேலத்தில் 10,000 ஜனத்தொகை இருந்தும், 48 பஞ்சாயத்துக்கள் சிபாரிசு செய்தும் கூட, 7,000 ரூபாய் பங்குத் தொகை கட்டியும் பிரைமரி சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்கவில்லை. இது வரையிலும் ஆரம்பிக்கவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கு தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சார், இதுவரைக்கும் ஆரம்பிக்கப் பட்ட பிரதம சுகாதார நிலையங்கள் அத்தனைக்கும் டாக்டர்கள் இருக்கிறார்களா ? டாக்டர்கள் இல்லாதவை எத்தனை ? 9-00 a.m.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது இருக்கிற பிரதம சுகாதார நிலையங்கள் எல்லாவற்றிலும் டாக்டர்கள் இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பார்க்கும் போது, சில

தினங்களுக்கு முன்பு அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள்; உத்தரப் பிரதேசத்திலே 323 ரூரல் டிஸ்பென்சரிகளில் டாக்டர்கள் இல்லை என்ற தகவலை. அப்படி இருக்கும்போது, நம் மாநிலத்தைப் பொறுத்தவரை நாம் பெருமைப்பட வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம்.

—

பிராவிடெண்டு பண்டு பிடிப்பு

* 373 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க ஊழியர்களின் ஐந்து சதவிகித அதிகப்படி பிராவிடெண்டு பண்டு பிடிப்பு எப்போது திருப்பித் தரப்படும்?

(இ) இதனால் குறைந்த வருமானம் உள்ள அரசாங்க ஊழியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ), (இ) இது விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், இந்த அரசாங்க ஊழியர்கள் கட்டாய சேமிப்பு செய்ய வேண்டாம் என்று மத்திய சர்க்காரிலே தீர்மானிக்கப் பட்டிருப்பதன் காரணமாக, அவர்களிடத்திலே இருந்து முன்பு வசூலிக்கப் பட்ட சேமிப்புத் தொகை எப்பொழுது திருப்பிக் கொடுக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கட்டாய சேமிப்பு வேறு பிராவிடெண்டு பண்டு வேறு. இது பிராவிடெண்டு பண்ட் பற்றிய கேள்வி.

Rubber factory in Kanyakumari district

* 374 *Q.*—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to start a rubber factory in Kanyakumari district during 1964?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: There is no proposal to start a rubber factory in Kanyakumari district during 1964.

1964-ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

SRI M. WILLIAM: Sir, may I know whether the Government have collected statistics regarding the annual supply of rubber from the rubber estates and other lands owned by private individuals in the Kanyakumari district? (The hon. Member was still standing).